தேதி : ஆக்டோபர் 2019
இடம் : கோவை.

# கூடாரத்தின் கடிதம்

ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தினாலே அனைவருக்கும் அற்புதம், ஆரோக்கியமான வாழ்வு உண்டாகட்டும், செப்டம்பர் மாதம் முழுவதும் பாதுகாத்து நடத்தி வந்த தேவனுக்கு கோடி நன்றி சொல்லுவோம். தேவனின் நாமத்தில் நல் வாழ்த்துக்களுடன் தங்களை சந்திப்பதில் **KTM-SIMM** ன் சார்பில் மகிழ்வடைகின்றோம்

“**தேவ வார்த்தையை பிடித்துக்கொள்ளுங்கள், அற்புதம் பெற்றுக்கொள்ளுங்கள்**” லூக்கா 8:43,44ன் வசனத்தை பார்த்தால் பெரும்பாடு உள்ள ஒரு பெண்ணை குறித்து போடப்பட்டுயிருக்கின்றன, இன்றைக்கு மிகவும் எளிய முறையில் ஒரு சத்திய வார்த்தையை கற்றுக்கொள்ள போகிறோம். அந்த பெண் தேவ வார்த்தையை பிடித்தால், அற்புதம் பெற்றுக்கொண்டால் எப்படியென்றால் அந்த பெண் அந்த வியாதியில் 12 வருடம் கஷ்டப்பட்டு கொண்டு இருக்கிறால், யூதா கலச்சாரத்திலே இப்படி பட்ட பிராச்சனை வந்தால் அவள் தீட்டுயுள்ளவள் என்று ஒதிக்கி வைப்பார்கள் லேவி 15:25, 28 என்ற வார்த்தை கவனித்து பாருங்கள், இவளுக்கு 12 வருடம் பிராச்சனை எவ்வளவு வேதனையாய் இவளுக்கு இருத்திருக்க வேண்டும் கொஞ்சம் யோசித்தால் நமக்கு புரியும் என்று நம்புகின்றேன். ஆனால் இவள் இயேசுவை குறித்து கேள்விப்பட்ட போது அவள் அவரை விசுவாசித்தால். அதன்பின்பு அவள் அவருடைய ஆடையின் ஓரத்தைத் தொட்டாள் என்று பார்க்கிறோம் அது என்னவென்றால் எண் 15:37,38,39 வசனம் பாருங்கள் தேவனுடைய கட்டடையை நினைவு படுத்த யூதா கலச்சாரத்திலே தங்களுடைய ஆடைக்கு மேல் ஒரு அங்கி போட்டு இருப்பார்கள் அதின் 4 முனையிலும் தொங்கள் இருக்கும், இதற்கு அர்த்தமும் ஒன்று உண்டு, அந்த தொங்களில் பின்னாலுக்கு **tzitzit** என்று சொல்லுவர்கள் கணக்கு வழக்கில் எண்கள் உண்டு அதை கூட்டும் போது 613 என்று வரும், இது எதற்காக இங்கு பதிவு செய்ய வேண்டும் என்றால், இந்த 613 என்பது தேவன் மோசேயின் மூலமாக கொடுக்கப்பட்ட கட்டளைகள் ஆகும். (The negative commandments number 365, the positive commandments number 248) எனவே இவள் யூதா பெண் இவளுக்கு அந்த தொங்களின் அர்த்தம் தெரியும், இயேசுவின் ஆடையில் அதை பார்த்தவுடன் அவளுக்கு நினைவுக்கு வருகிறது தேவனுடைய கட்டளை, இயேசுவின் ஆடையை அல்ல வார்த்தையாகிய இயேசுவை (யோவான் 1:1) பிடித்துக் கொண்டால் அற்புதம் பெற்றுக்கொண்டால்

எனவே! இந்த சிறு செய்தியில் இருந்து நாம் என்ன கற்றுக்கொள்ள போகிறோம் என்றால் தேவ வார்த்தையை பிடித்த ஒவ்வொரு மனிதனுக்கும் அற்புதம் காத்திருக்கிறது. எனவே வாழ்விலும் இயேசு அற்புதம் செய்ய காத்துயிருக்கிறார், வார்த்தையை பிடித்துக்கொண்டு அற்புதம் பெற்றுக்கொள்ள நீங்கள் ஆயத்தமா?

இயேசு உங்களை ஆசீர்வதிப்பாராக, ஆமென்!

கிறிஸ்துவின் பணியில்
ராஜ கூடார - தென் இந்திய மிஷனெரி இயக்கம்

**சகோ. பிரேம்குமார்.**

# கடந்த மாதம் நமது ஊழிய விவரங்கள்

ஒத்தக்கால் மண்டபம்

**துதிக்க** :

- ஒத்தக்கால்மண்டபத்தின் சார்பாக இசை பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது
- இந்த மாத புதிய ஆத்துமாக்கள் வந்துள்ளனர், அவர்கள் தொடர்ந்து சபைக்கு வர வேண்டும்.
- சகோ. பிரேம்குமார் 17ம் தேதி துத்துகுடியில் சகோ. சிபி அவர்கள் ஊழியத்தில் தேவ செய்தி கொடுக்க தேவன் கிருபை செய்தார், அதை பகுதியில் புதிய ஊழியத்திற்காக சில திறந்த வாசல்களை தேவன் தருகின்றார், தொர்ந்து ஜெபிப்போம்.
- செப்டம்பர் 21, 22 அகிய தேதிகளில் சென்னை பகுதியில் தொடர்ந்து 2 நாள் சிறப்பு கூடகையில் தேவ செய்தி கொடுக்க தேவன் கிருபை செய்தார்.
- கடந்த செப்டம்பர் 3ம் தேதி விநாயகர் உருவளம் வரும் போது நம்முடைய ஒத்தக்கால்மண்டபத்தில் சகோ.பிரேம்குமார் அவர்கள் வீட்டில் தொன்தரவு செய்துவிட்டர்கள், காவல் துறையும் முழு ஆதரவு அவர்கள் பக்கம் இருந்தது ஆனால் தேவன் ஒரு ஆபத்துயின்றி பாதுகாத்து கொண்டார்.

**ஜெபிக்க** :

- தொடர்ந்து ஒத்தக்கால்மண்டபத்தில் வரும் பிராச்சனையை தேவன் மாற்றி தர வேண்டும், சமாதானம் தரவேண்டும்.
- முத்தம்மா அவர்களது பேரபிள்ளைகளின் படிப்பிற்காகவும் இவர்களுக்கு வரவேண்டிய பணங்கள் தடைபட்டுள்ள நிலையில் தேவன் தாமே பணத்தேவைகளில் ஓர் மாற்றத்தை உண்டாக்கிட.
- பாப்பாத்தி அம்மாவின் உடல் பெலவீனங்கள் நீங்கி விரைவில் சபை ஆராதனையில் பங்குபெற தேவன் குணப்படுத்தும்படியாக
- சகோதரர் கோவிந்தன் (இந்து முன்னனி) இவர் தொடப்படவும். இவர் மூலமாய் OKM சுற்று வட்டார பகுதியில் சபைகளுக்கு உண்டாக்கப்படும் பிராச்சனை மாறவேண்டும், இவரும் இவரோடுள்ள வாலிபர்களும் மனம்மாற ஜெபிப்போம்.

- சென்னையில் ஒரு பெரிய ஊழியர் நம்முடைய ஊழியத்தை ரொம்ப நேசித்து ரூபாய் 10000 கொடுத்தார், தேவனுக்கு நன்றி சொலுத்துவோம்.

# கடந்த மாதம் நமது ஊழிய விவரங்கள்

## மீனாட்சிபுரம்

**துதிக்க** :

- சபைக்கு வருகின்ற தாயார் ரங்கம்மாள், முரகன் என்பவரின் வீடு மழையினால் மேற்கூரை பாதிப்படைந்திருந்தது அதற்காக ஜெபித்தோம். கர்த்தர் பணதேவைகளை சந்தித்தார், மேற்கூரை சரிசெய்யப்பட்டது.
- கடந்து மாதம் 17 மற்றும் 18 தேதிகளில் விடுதலை ஜெபம் நடத்தப்பட்டது. அதில் 35 பேர் கலந்து கொண்டனர். எந்த வித தடையுமின்றி தேவன் நடத்தி கொடுத்தார்.

**ஜெபிக்க** :

- சபையின் மேற்கூரை பழுதடைந்துள்ளது. சரிசெய்ய தேவையான பணம், பொருளுதவி கிடைக்க ஜெபிப்போம்.
- சபைக்கு தொடர்ந்து புதிய ஆத்துமாக்கள் வர வருகின்றவர்கள் சத்தியத்தில் நிலைநிற்க பின்மாறி போகாமல் இருக்க ஜெபிப்போம்
- தெய்வானை என்பவர் உடல்நிலை சரியில்லாமல் உள்ளார் அவருக்காக ஜெபிப்போம்.
- சபைக்கு வருகின்ற குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்பட கடன்பிரச்சனை, வியாதி, வறுமைகள் மாற ஜெபிப்போம்.
- மருதாசலம் சகோதரனுக்கு சர்க்கரை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார். பூரண சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

## பி. நாகூர்

**ஜெபம்**

- காளீஸ்வரி என்ற சகோதரியை காணவில்லை அவர் திரும்ப கிடைக்க. வீடு திரும்ப ஜெபித்துக் கொள்ளுங்கள்
- காளியம்மா என்ற சகோதரிக்கு சத்துணவுத் துறையில் வேலை கிடைக்க 50,000 ரூபாய் கேட்கிறார்கள். எந்த
  செலவுமில்லாமல் வேலை கிடைக்க
- நமது சபையில் ளிநஉயைட அநநவடைபேள நடக்க, சூழ்நிலைகளும் அதற்கான தேவைகளை கர்த்தர் சந்திக்கும்
  படியாக ஜெபித்துக் கொள்ளுங்கள்.
- வீட்டுக்சுட்டம் நடத்த வீடுகள் திறந்து கொடுக்கப்பட வேண்டும்.
- அருள்மணி என்ற சகோதரியின் அப்பா குடிப்பழக்கத்தை விட வேண்டும் மற்றும் சகோதரியின் திருமணத்திற்காக
- மேரி அம்மா அவர்களின் மகன்களுக்கு வீடு கட்ட நிலம் கிடைக்க, மீனாட்சி அம்மாவிற்கு தொடர்ந்து வேலை
  கிடைக்க. மகனுடன் குடும்பமாய் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.

# கடந்த மாதம் நமது ஊழிய விவரங்கள்

## மாலேகவுண்டன் பாளையம்

**துதிக்க** :

- சபையை நோக்கி புதிய ஆத்துமாக்கள் வர ஆரப்பித்துள்ளனர்.

**ஜெபிக்க** :

- ஞானமுத்து ஐயா, குணமணி அம்மா ஊரில் மூத்த விசுவாசிகள் இவர்கள் சமாதானமாக சாட்சியாக வாழ்ந்திட தேவன் தொடும்படியாக
- சகோதரி கலைச்செல்வி மகன் ஆகாஷ், மகள் இந்துமதி , அம்மா செல்லம்மாள் ஆகியோருக்காக நல்ல வேலை கிடைக்க பிள்ளைகளின் படிப்பு, பாதுகாப்பிற்காக
- சண்முகசுந்திரம், வெண்ணிலா அவர்கள் வீடு கட்டப்பட மகள் ஸ்ரீநிதி ஆரோக்கியத்திற்காக
- எஸ்தர் ராணி அவர்களின் கண்பார்வை தெளிவடைய
- பாப்பாத்தி அம்மா, செம்பாத்தாள், அங்காத்தாள், மாரியம்மாள் ஆகியோருக்காக
  தங்கம்மாள், மகேந்திரன், உமா மற்றும் புதிதாய் பிறந்த ஆண் குழந்தைக்காக ஜெபிக்கவும்.

## P.N. புதூர்

**துதிக்க** :

- கடந்த மாதம் சபையில் நடைபெற்ற எல்லா ஆராதனைகளையும் ஆசீர்வதித்தார் வீட்டுக்கூட்டங்களை ஆசீர்வதித்தார்
- சாராள் அம்மாவின் சென்னை மற்றும் பெங்களூர் பிரயாணம் மற்றும் ஊழியத்தையும் தேவன் ஆசீர்வதித்தார்
- சபையின் குடும்பங்களை தேவன் நேர்த்தியாய்

**ஜெபிக்க** :

- புனிதம்மாவின் உடல் நலத்திற்காக ஜெபிக்கவும், வேலையில் ஆசீர்வாதத்திற்காக, பொருளாதார ஆசீர்வாதத்திற்காக
- ரூத்தம்மாவின் வலது கால் வலி மாற, மகன் லோகேஷின் திருமண காரியங்களுக்காக, மகள் ரம்யாவின் எதிர்காலத்திற்காக, பேத்தியின் சுகம், பெலன், படிப்பு ஆரோக்கியத்திற்காக.
- ஷைலஜா மேடம் அவர்களின் குடும்பத்திற்காக, பண தேவைகள் சந்திக்கப்பட, இட விஷயத்தில் நல்ல ஒரு தீர்வு கிடைக்க.
- சாரா அம்மாவின் ஓசூர் பகுதியில் உள்ள இடம் நல்ல விலைக்கு விற்க. ரேஷ்மா மற்றும் இஸ்ரேல் இருவருடைய எதிர்காலம்,ஊழியம்,திருமண காரியங்களுக்காக.
- சகோ முரளி அவர்களின் குடும்பம், இரண்டு பிள்ளைகளின் படிப்பு, அவரின் வேலையில் ஆசீர்வாதம், உடல் சுகத்திற்காக ஜெபிக்கவும்.
- மேரியம்மாவின் உடல் சுகத்திற்காக, கணவரின் பெலவீனம் நீங்க, தொடர்ந்து சபைக்கு வர ஜெபிக்கவும்.
- இந்த ஆண்டு இறுதிக்குள் 25 குடும்பங்கள் சபைக்கென தேவன் தர ஜெபிக்கவும்.
- பாஸ்டர் பிரேம் அவர்களின் சித்தப்பா திரு ராதா கிருஷ்ணன் அவரின் உடல்நிலை சரியாக, குடும்பத்தை கர்த்தர் இரட்ச்சிக்க பாராத்தோடு ஜெபிக்க வேண்டும்.

# கடந்த மாதம் நமது ஊழிய விவரங்கள்

பரிசுத்த வேதாகமத்தில் அப்போஸ்தலத் பவுல் கூறினது போல

"அப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் (நாங்கள்) எல்லாருக்கும் எல்லாமானேன்" (எல்லாமாவோம்) கொரிந்தியர் 9:22 என்கிற வசனத்தின் படி

பின் தங்கிய கிராம பகுதிகளை தேடிச்சென்று பராமரிப்பின்றி கைவிடப்பட்ட பழைய சபைகளை ஜெபத்தினாலும் பெறும் முயச்சியினாலும் மீட்டெடுத்து சீரமைப்பு பணிகள் மேற்கொண்டு அற்ப்பணிப்போடு, ஆத்தும பாரத்தோடு KTM SIMM தரிசனத்திற்கு ஒத்திசைந்து மிஷெனரிகளாக நம் ஊழியர்கள் செயலாற்றி வருகின்றனர். ஒவ்வொரு பணிஸ்தலத்திலிருந்தும் தற்சமயம் அனேக சாட்சிகளை, ஊழிய மேம்பாட்டு காரியங்களை கேட்டு வருகின்ற இந்த சூழ்நிலையில் பிசாசானவன் பல வித இன்னல்களில் வழியாக **மனச்சோர்வு + உடல் சோர்வு = பெலீனம்** என்று வீட்டில் முதலாவது சமாதானத்தை சீர்குலைத்தும். பொருளாதார நிலையில் வருமான குறைவு, வேலையின்மை போன்றவற்றை கொண்டு வருகின்றான் இதற்கிடையில் ஊழியர்களின் குழந்தைகளுக்கு அவ்வப்போது வியாதியின் வேதனையையும் கொடுத்து அதையும் மேற்கொண்டு தேவனிடமே எல்லாபாரத்தையும் வைத்துவிட்டு பொறுமையோடு ஊழிய பாதையில் பயணிக்கின்றனர். எனவே இப்படி பல போராட்டங்களை மேற்கொள்ளும் அனைத்து ஊழியர்களுக்காக நாம் ஜெபிப்பது கடமையாகும். இதன் அடிப்படையில் நமது KTM SIMM ஊழியர் குடும்பத்தார் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது தங்களது அனுதின ஜெபங்களில் இவர்களை நினைவுகூர்ந்து ஜெபத்தில் தாங்குங்கள் கர்த்தர் நிச்சயம் உங்களை ஆசீர்வதிப்பார்.

ஆமென்

- Pr. **பிரேம்குமார்**, துணைவியார் Sis. ஏஞ்சல், மகள் நட்டாஷா, மகன் நத்தானியேல், அம்மா ராஜீ ஆகியோருக்காக ஜெபிக்கவும்
- மாலேகவுண்டம் பாளையம் Pr. **ஜோசப்**, துணைவியார் Sis. ரூத் சந்திரகலா, மகன்கள் ஜோயல் சாமுவேல், ஜோனத்தன் சாமுவேல் ஆகியோருக்காக ஜெபிக்கவும்.
- வழுக்குப்பாறை Pr. **டேவிட் மணி**, துணைவியார் Sis.கெத்சியாள் பானுப்பிரியா, மகள் டேனிகா ஸ்வீடி அம்மா ஜெபமணி ஆகியோருக்காக ஜெபிக்கவும்.
- மீனாட்சிபுரம் Sis. கிரேஸ் மற்றும் தாயார் வளர்மதி, தம்பி பிரகாஷ், அக்கா ஜேஷ்மீனா, மாமா Pr.பிரகாசம் ஆகியோருக்காக ஜெபிக்கவும்
- PN புதூர் வடவள்ளி Pr. **ஜெனு**, துணைவியார் Sis. பிரியா மகள் மெல்க்கா அகியோருக்காக ஜெபிக்கவும்.
- P. நாகூர் Pr. **பூரணசந்திரன்**, துணைவியார், மகன் கிறிஸ் பால் ஆதம் ஆகியோருக்காக ஜெபிக்கவும்.
- ஒரு மாதத்திற்கு நம்முடைய ஊழியத்திற்கு மற்றும் ஊழியர்களுக்கு சம்பளம், காரியங்களுக்கு என்று மாதம் ரூபாய். 15,000 வரை தேவைகள் இருக்கிறது, ஆகவே ஒரு மிஷனரிக்கு ரூபாய். 5000 செலவு உள்ளது.

இவர்களை ஊழியர்கள் மற்றும் அவர்களது துணைவியார் என இரு குடும்பத்தையும் தேவன் பாதுகாத்து நடத்தும்படியாக ஊழியத்தின் தேவைகள் சந்திக்கப்பட தொடர்ந்து ஜெபியுங்கள்.

நன்றி!!!